# மருத்துவக் கல்வியை மேம்படுத்த கட்டடம், புதிய வசதிகள்

மருத்துவ மாணவர்கள், ஆய்வாளர்களின் பயன்பாட்டுக்காக 17 மாடிகளைக் கொண்ட புதிய வசதியான தஹிர் அறநிறுவனக் கட்டடம் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் ஹெங் சுவி கியட்டால் திறந்துவைக்கப்பட்ட இந்தக் கட்டடத்துக்கு இந்தோனீசியாவின் பிரபலமான வர்த்தகர் மற்றும் நன்கொடையாளரான டாக்டர் தஹிரின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்துக்கு 2012ஆம் ஆண்டு $30 மில்லியன் வழங்கினார் தஹிர். மருத்துவக் கல்வியை மேம்படுத்துவதற்கான உயிர்மருத்துவ ஆய்வு, திட்டப்பணிகளுக்காகவும் மாணவர்களுக்கான உதவிச்சம்பளம், உபகாரச் சம்பளம் ஆகியவற்றுக்காக அந்த நிதியை அவர் வழங்கினார்.

கெண்ட் ரிட்ஜில் அமைந்துள்ள இந்தப் புதிய கட்டடத்தில் யோங் லூ லின் மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களுக்கான ஆய்வகங்கள், அறைகள் அமைக்கப்படும்.

சா சுவீ ஹாக் பொதுச் சுகாதாரப் பள்ளி, மருந்தகம், வேதியியல் மாணவர்கள் ஆகியோரும் அந்த வசதிகளைப் பகிர்ந்துகொள்வர்.

மனித உடற்கூறியலை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்குப் பயன்படும் முப்பரிமாண மனித உடல்கள், அவசர சிகிச்சை அறையில் அளிக்கப்படுவது போன்ற சூழல்களை ஏற்படுத்துவதற்கான வசதிகள் ஆகியன அவர் வழங்கிய நன்கொடையிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளன. மருத்துவக் கல்வித்திட்டத்தை மேம்படுத்துதல், தாதியர், துணை மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து பணியாற்ற மருத்துவ மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.